மாற்றி அந்தக் காலனிகளுக்கு அரிசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களின் பெயர்களை சூட்டலாம் என்று இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. அரசாங்கத்துன் மூலமாக வழங்கப்படுகின்ற கடன் ரூ. 3,000 அதை உயர்த்திக் கொடுத்து அப்படிக் கடன்கள் வழங்கப்படும்போது உடனுக்குடன் கிடைக்குமாறு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் காரணம் அப்படிப்பட்ட கடன்களை வாங்குகிற போது வில்லங்கம் போன்றவைகளை பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சிக்கல்களைப் போக்கி அவர்கள் உடனடியாகக் கடன் பெறும் வழியைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பள்ளிப்பட்டு தொகுதி ஆந்திர மாநிலத்தில் இருந்து பிரிந்த பகுதியாகும். அந்தத் தொகுதியை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து அந்தத் தொகுதியை மேம்பாடடையச் செய்யவேண்டும். காரணம் இந்தத் தொகுதியில் அதிகமான அளவு அரிசன மக்கள், பழங்குடியினர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தால் அங்கே உள்ள மக்கள் மிகுந்த நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

[பிற்பகல் 12-40]

எனது தொகுதியைப் பொறுத்தமட்டில், பாலபுரம், எஸ். அஜ்ராவரம், முருகம்பட்டு, வெடியங்காடு, தேவலாம்பாபுரம், சகஸ்ரபத்மநாபபுரம் ஆகிய பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. அங்கே அரிசன மக்கள் வாழ்ந்த கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள். சாலைகள், குடிநீர் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைகளை உடனடியாக்கப்போக்க, இந்த அரிசன மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியக்கோரிக்கையை மன்தார வரவேற்று அண்ணாவின் புகழ் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

7. அறிவிப்பு.

பேரவையின் 54வது விதியின் கீழ் உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1980 ஜூலை, 22] *[பேரவைத் துணைத்தலைவர்]*

பேரவையின் 54-வது விதியின் கீழ் கொடுக்கப்படும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், அனுமதிக்கப்பட்டுத் துறைகளுக்கும் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இவற்றிற் கான அறிக்கைகள் தயாரானதும் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படு கிறது.

இவ்வாறு பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டபின் அதே பொருளில் கொடுக்கப்படும் மற்ற மாண்புமிகு உறுப்பினர் களின் அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப்பட இயலாதிருப்பதாலும் மறுநாளுக்கான நிகழ்ச்சி நிரல் முதல் நாள் பகல் 12 மணி அளவில் தயாராகி விடுவதாலும், பேரவையில் எடுத்துக்கொள்ளப் பட குறிப்பிடப்படும் நாளுக்கு 2 நாட்கள் முன்னதாகக் கொடுக் கப்படும் அறிவிப்புக்கள்தான் எடுத்துக்கொள்ளப்படமுடியும் என் பதாலும், இதைக் கருத்தில் கொண்டு அறிவிப்புகள் கொடுக்கும் படி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(6) வரவு செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு— தொடர்ச்சி.

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டுக்கான அரிசன பழங்குடி மக்கள் மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறை ஆகிய மானியக்கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வயதிலே இளையவராக இருக்கிறார் என்று பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், தங்க ளுடைய பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். சில நாட்களுக்கு முன்பு நம்முடைய தமிழரசு பத்திரிகையில் நான் பார்த்தேன். நம்முடைய தாழ்த்தப்பட்டோர்நலத்துறைஅமைச்சரின் வாழ்க்கை குறிப்பு இடம் பெற்று இருந்தது. அதில் அவர் 1954ல் பிறந் தார் என்பதை நான் அறிந்த போது உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன். காரணம், 1954ல் நான் கல்லூரியில் சேர்ந்து விட்டேன். ஆகவே, சரியாக 26ஆண்டு நிரம்பிய ஒரு இளைஞர் இந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்று இருப்பதற்காக நான் என் மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த பொறுப்பு ஏற்று இருக்கும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல சுதந்திர உணர்வோடு இந்த அமைச்ச ரவையில் பணியாற்றவேண்டும். நல்ல பாதுகாப்போடும்,